
பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை 06.04.2025 | அதிர்வு 244

## “பாதுகாப்பு ஒப்பந்தத்தால் பாதிப்பு எதுவும் இல்லை”



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புதிய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளால் 09 ▶



# ஒற்றையாட்சிக்குள் தீர்வு சரிவராது அதை மோடிக்கு எடுத்துரைத்தோம்

## கஜேந்திரகுமார் எம்.பி. விளக்கம்



“ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வோ, தீர்வோ சரிவராது என்ற நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துரைத்தோம்.” - என்று நேற்று இந்தியப் பிரதமரைச் சந்தித்த பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார்.

ஷசந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியப் பிரதமரிடம் நான்கு விடயங்களை முன்வைத்தது.

ஷமுதலாவது - இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வை - பங்களிப்பு - உரித்து - இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம் என்று குறிப்பிட்டோம். 11 ▶

# 3 அபிவிருத்தித் திட்டங்கள் இணையவழியில் ஆரம்பம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து 3 அபிவிருத்தித் திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

அந்தவகையில், தேசிய மின் கட்டமைப்பில் 50 மெகாவாட் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய மின்சக்தித் திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தம்புள்ளை விவசாயக் களஞ்சிய கட்டடத் தொகுதி மற்றும் 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டமும் திறந்து வைக்கப்பட்டன. 10 ▶




தமிழர் தரப்போடு இந்தியப் பிரதமர் நேற்று நடத்திய கலந்துரையாடல் சமயம், பேச்சுக்களில் பங்கு பற்றிய தமிழர் தரப்புக் குறித்து இந்திய பிரதமருக்கு முற்கூட்டியே நன்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன என்று தெரிகிறது.

சந்திப்புக்குத் தமிழர் பிரதிநிதிகள் வந்தவுடன், முதல் விடயமாக என்னோடு முன்னர் இத்தகைய பேச்சுக்களில் பங்கு பற்றிய மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் இன்று இல்லை, அவர்களுக்கு என்னுடைய அனுதாபங்கள் என்று தம்பாட்டிலேயே பிரதமர் மோடி குறிப்பிட்டு பேச்சுக்கு வந்தோரை அசர வைத்தார்.

பின்னர் பேச்சுக்களில் பங்கு பற்றிய தமிழர் பிரதிநிதிகளை ஒவ்வொருவராக கைலாகு கொடுத்து வரவேற்ற பிரதமர், எம்.பி. சாணக்கியனுக்கு கை கொடுத்த போது, ‘இலங்கைத் தமிழ்த் தலைவர்களில் 09 ▶



# மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இந்தியா எப்போதும் துணை நிற்கும்

**இ.தொ.கா., முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகளிடம் மோடி தெரிவிப்பு**

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மலையக அரசியல் தலைவர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மலையகத் தமிழர்களுக்காக இந்தியாவால் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக இந்திய அரசினால் மலையக மக்களுக்கும், இலங்கை நாட்டுக்கும் தொடர்ச்சியாக வழங்கி வரும் உதவிகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஜீவன் தொண்டமான், பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்தார்.

அதேவேளை, மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இந்தியா எப்போதும் துணை நிற்கும் எனவும், அதற்குத் தேவையான உதவிகளை வழங்கும் எனவும் இதன்போது பிரதமர் தெரிவித்தார் எனத் தெரியவருகின்றது.

# அனுராதபுரத்தில் இன்று விசேட போக்குவரத்து



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தை முன்னிட்டு அனுராதபுரம் பகுதியில் இன்று விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்தியப் பிரதமர் இன்று முற்பகல் அனுராதபுரம் ஜய ஸ்ரீமஹா போதிக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

இன்று காலை 7.30 முதல் முற்பகல் 10.30 வரையான காலப்பகுதிக்குள் அனுராதபுரம் நகரம், ஜய ஸ்ரீமகா போதிய மற்றும் ரயில் நிலையத்தை அண்மித்த பிரதான வீதிகள் இடைக்கிடையே மூடப்படவுள்ளன.

இன்று அனுராதபுரம் புனித பூமி பகுதிக்கு செல்லும் யாத்திரிகர்கள் சிரமமின்றி வழிபாடுகளை மேற்கொள்வதற்காக மாற்று வழிகளின் ஊடாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




# அமெரிக்காவின் வரியால் இலங்கைக்குப் பாதகம்: இந்திய சந்தையில் வாய்ப்புக் கோருகின்றார் சஜித்

## மோடியிடம் நேற்று அவர் நேரில் தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதேபோல், இலங்கை வங்குரோத்தடைந்திருந்த சந்தர்ப்பத்தில் ஒரு தனி நாடாக அதிக நிதி ஆதரவுகளை வழங்கி அதிக உதவிகளை செய்த நாடு இந்தியாவே என்றும், அந்தத் தருணத்தில் நாட்டுக்கு உதவும் வகையில் இந்திய அரசு அளித்த ஒத்துழைப்பைப் பெரும் மனம் கொண்டு பாராட்டுகின்றேன் என்றும், இதற்காக இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித், இந்தியப் பிரதமர் முன்னிலையில் தெரிவித்தார்.

மேலும், இந்தியா – இலங்கை நட்புறவை வலுவான அடித்தளமாகப் பேணுவதுடன், இரு நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் இலக்குகளை நிறைவு செய்து கொண்டு, இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

அவ்வாறே, எமது நாடு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார மந்தநிலையிலிருந்து மீளுவதற்கு மேலும் தேவையான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய அமெரிக்கா குடியரசு எமது நாட்டின் ஏற்றுமதிக்கு விதித்துள்ள 44 சதவீத பரஸ்பர வரி காரணமாக இந்த நாட்டின் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கும், அதன் ஊழியர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் நிலைமைகளையும் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

ஆகையால், இந்திய சந்தையில் எமது நாட்டின் ஆடைகள் உட்பட பிற உற்பத்திப் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது இந்தியப் பிரதமரிடம் கௌரவத்துடன் கேட்டுக்கொண்டார்.





# திருக்கோணேஸ்வரம் புனரமைப்புக்கு இந்தியா உதவும் என மோடி அறிவிப்பு

கொழும்பில் நேற்று இலங்கை ஜனாதிபதி திஸநாயக்காவுடனான கூட்டு ஊடக அறிக்கை வெளியீட்டின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திருக்குறளை மேற்கோள் காட்டினார். அத்தோடு திருக்கோணேஸ்வரம் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படுவதற்கு இந்தியா உதவிகளை வழங்கும் என்றும் அவர் அறிவித்தார்.

பிரதமர் மோடி நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்றைய தினம் ஜனாதிபதி திஸநாயக்கா அவர்களால் “இலங்கை மித்ர விபூஷண்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை என்னைப் பொறுத்தவரையில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இந்த விருதானது என்னை மாத்திரம் கௌரவிக்கவில்லை, இது 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைக்கப்பெற்றிருக்கும் ஒரு கௌரவமாகவும். அதுமட்டுமல்ல, இந்திய, இலங்கை மக்களிடையில் காணப்படும் வரலாற்று ரீதியான உறவுகள் மற்றும் ஆழமான நட்புறவு ஆகியவற்றுக்கான சமர்ப்பணமாகவும் இது அமைகின்றது.

இந்த கௌரவத்திற்காக ஜனாதிபதி, இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்காக நான் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நண்பர்களே,

பிரதமராக நான் இலங்கைக்கு மேற்கொள்ளும் நான்காவது விஜயம் இதுவாகும். கடந்த தடவை, 2019 இல் மிகவும் உணர்வுபூர்வமான ஒரு தருணத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இலங்கை சகலவற்றிலிருந்தும் மீண்டு மிகவும் வலுவான இலங்கையாக மேலெழும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

இலங்கை மக்களின் ஊக்கம் மற்றும் பொறுமையை நான் பாராட்டுகின்றேன். அது மட்டுமல்ல இன்று இலங்கையானது மீண்டும் முன்னேற்ற பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதை காண்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். இவ்வேளையில் உண்மையான ஓர் அயலக நண்பனாக தனது கடமைகளை இந்தியா நிறைவேற்றுகின்றமை பெருமைக்குரிய ஒரு விடயமாகும். 2019 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாத தாக்குதலாக இருந்தாலும் சரி, கொவிட் பெரும் தொற்றாக இருந்தாலும் சரி, இல்லாதுவிடில் அண்மையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி, சகல சந்தர்ப்பத்திலும் நாம் இலங்கை மக்களுடன் உறுதுணையாக நின்றிருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழின் மாபெரும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின், திருக்குறள் ஒன்று எனக்கு ஞாபகம் வருகின்றது.

“செயற்கரிய யாவுள நட்பின் - அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு”

அதாவது சவால்களையும் எதிரிகளையும் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உண்மையான ஒரு நண்பனையோ அல்லது அவரது நட்புறவின் கவசத்தையோ காட்டிலும் வலுவான உத்தரவாதம் வேறொன்றும் இல்லை என்பதே அந்த திருக்குறளின் அர்த்தமாகும்.

நண்பர்களே, ஜனாதிபதி திஸநாயக்கா அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்துக்காக இந்தியாவை தெரிவு செய்திருந்தார். அதேவேளை அவரது பதவிக்காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு தலைவர் என்ற முன்னுரிமை எனக்கு கிடைக்க பெற்றுள்ளது. நமது சிறப்புமிக்க உறவுகளின் ஆழத்தை பிரதிபலிக்கும் ஒரு குறியீடு இதுவாகும்.

அது மட்டுமல்ல, அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மகாசாகர் கொள்கை ஆகியவற்றில் இலங்கைக்கு முக்கியத்துவமிக்க இடம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி திஸநாயக்கா அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த காலப்பகுதி முதலான நான்கு மாதங்களில் எமது ஒத்துழைப்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கையின் சக்தி தேவையினை பூர்த்தி செய்வதற்கு சம்பூர் சூரியக்கல மின் தொகுதி ஆதரவாக இருக்கும் என்பதனை குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல பல்பொருள் குழாய் இணைப்பு ஒன்றினை நிர்மாணித்தல் மற்றும் திருகோணமலையை சக்தி மையமாக அபிவிருத்தி செய்தல் ஆகியவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கையானது சகல இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான மின் வலையமைப்பு இணைப்பு உடன்படிக்கையானது இலங்கை மின் சாரத்தை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளை உருவாக்கும்.

இலங்கையிலுள்ள மத ஸ்தலங்களுக்காக 5000 கூரைமேல் சூரியக்கல மின் தொகுதிகளை விநியோகிக்கும் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை தொடர்பில் மகிழ்வடைகின்றேன். அதேபோல இலங்கையின் பிரத்தியோக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்திற்கும் இந்தியா ஆதரவினை வழங்கும்.

“சப்கா சாத் சப்கா விகாஸ்” கொள்கையினை இந்தியா அங்கீகரித்துள்ளது. எமது பங்காளி நாடுகளின் முன்னுரி

தொடர்ச்சி▼



# திருக்கோணேஸ்வரம் புனரமைப்புக்கு இந்தியா உதவும் என மோடி அறிவிப்பு

தொடர்ச்சி▲

மைகளுக்கும் நாம் மதிப்பளிக்கின்றோம்.

கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கடன்களை நாம் நன்கொடை திட்டங்களாக மாற்றி இருக்கின்றோம். நமது இருதரப்பு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை இலங்கை மக்களுக்கான உடனடி உதவிகளையும் நிவாரணத்தையும் வழங்குவதற்கு வழிசமைக்கும். அதேவேளை வட்டி வீதங்களையும் குறைப்பதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம். இன்று கூட, இலங்கை மக்களுடன் இந்தியா துணை நிற்கின்றது என்பதனையே இவ்வாறான விடயங்கள் எடுத்தியம்புகின்றன.

கிழக்கு மாகாணத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக 2.4 பில்லியன் இலங்கை ரூபா உதவிப்பொதி ஒன்று வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் நலன்களை கவனத்தில் கொண்டு இலங்கையின் பாரிய களஞ்சிய தொகுதி ஒன்றும் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நாளை மாஹோ-ஓமந்தை ரயில் மார்க்கத்தினை திறந்து வைக்க உள்ளோம். அத்துடன் மஹோ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதிக்கான சமிக்ஞை தொகுதிகள் நிர்மாணப் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்படும். இவ்வாறான திட்டங்களின் தொடர்ச்சியாக காங்கேசன்துறை துறைமுகத்தின் நவீன மயமாக்கல் பணிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

அது மட்டுமல்லாமல் இலங்கையில் உள்ள இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்காக 10,000 வீடுகளின் நிர்மாண பணிகள் விரைவில் பூர்த்தி அடைய உள்ளன. இந்தியாவால் வழங்கப்படுகின்ற திறன் விருத்தி திட்டங்களில் மேலதிகமாக 700 இலங்கை அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறை சார்ந்த அதிகாரிகள், தொழில் முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் இவ்வாறான பயிற்சித் திட்டங்களுக்காக உள்வாங்கப்படுவார்கள்.

பொதுவான பாதுகாப்பு நலன்களை கொண்டவர்களாக நாங்கள் உள்ளோம் என நாம் நம்புகிறோம். இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பானது ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து காணப்படுவதுடன் பரஸ்பரம் இரு நாடுகளிலும் தங்கியுள்ளது.

இந்தியாவின் நலன்கள் குறித்த அவரது உணர்வுக்காக ஜனாதிபதி திஸ்நாயக்க அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். பாதுகாப்பு, ஒத்துழைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான உடன்படிக்கையினை நாம் வரவேற்கின்றோம். அதேபோல கொழும்பு பாதுகாப்பு குழுமம் மற்றும் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டம் ஆகியவை குறித்து ஒன்றிணைந்து செயல்படுவதற்கு நாங்கள் இணங்கியுள்ளோம்.

இந்தியாவுக்கு இலங்கைக்கும் இடையில் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த ஆன்மீக உறவு காணப்படுகின்றது.

எனது சொந்த மாநிலமான குஜராத்தில் உள்ள ஆரவல்லியில் 1960 ஆம் ஆண்டில் மீட்கப்பட்ட புத்த பெருமானின் புனித தாது பொருடள்கள் இலங்கையில் மக்கள் தரிசனத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதனை நாம் மகிழ்வுடன் அறிய தருகின்றோம்.

திருகோணமலையில், உள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படுவதற்கு இந்தியா உதவிகளை வழங்கும். அதேபோல நுவரெலியா சீதை அம்மன் ஆலயம் மற்றும் அநுராதபுரம் மஹா போதி விகாரை வளாகத்தின் புனித நகர் நிர்மாணம் ஆகியவற்றுக்கும் இந்தியா ஆதரவினை வழங்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் அறிய தருகின்றேன்.

மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்தும் நாம் கலந்துரையாடினோம். இந்த விவகாரத்தில் மனிதாபிமான அடிப்படையில் அணுகுமுறை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதேபோல சிறைச்சாலைகளில் உள்ள மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அவர்கள் எனக்கு தெரிவித்திருந்தார். அத்துடன் இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான உறவுகள் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டவை ஆகும். நமது மக்களின் நம்பிக்கைகள் மற்றும் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றுவோம்.

அன்பான வரவேற்புக்காக ஜனாதிபதி திஸநாயக்காவுக்கு மீண்டும் ஒருமுறை எனது இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் எமது பங்குடமையை புதிய உயரத்திற்கு கொண்டுசெல்ல முடியுமென நான் நம்புகிறேன்.

அனைவருக்கும் நன்றி. - என்று உள்ளது.




# இழுவைமடி மீன்பிடி முறைமையை இந்தியாவும் தடை செய்ய பிரதமர் மோடியிடம் கோரினோம்!

## நேற்றைய சந்திப்புக் குறித்து சுமந்திரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

இழுவைமடி மீன்பிடி முறைமையைத் தடை செய்து இலங்கையிலே சட்டத்தை இயற்றியுள்ளோம். அதேபோல் இந்தியாவிலும் சட்டமாக்கப்பட வேண்டும் எனக் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரினோம் எனத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு தாஜ்சமுத்திரா விடுதியில் நேற்றைய தினம் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் சந்திப்பின் பின்னரான ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கே அவர் தொடர்ந்து கருத்துரைக் கையில் –

சந்திப்பின் ஆரம்பத்தில் தமிழ் மக்களின் தலைவர்களாக நீண்ட காலம் சேவையாற்றிய இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்றோருக்கு தனது அனுதாபத் தைத் தெரிவித்தமையோடு கடந்த கால சந்திப்புக்களில் அவர்களும் பங்குகொண்டமையை நினைவுபடுத்தினார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு இருக்க முடியும் என்ப தனை நாங்கள் நம்புகின்றோம். ஓர் அர்த்தமுள்ள அதிகா ரப் பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலே பல குறைபாடு கள் காணப்படுகின்றன. அதாவது 13 ஆம் திருத்தம் கூட முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பது இரு அரசுக ளும் ஏற்றுக்கொண்ட ஓர் விடயம். 2010, 2011, 2012 ஆம் ஆண்டு ஆகிய மூன்று தடவைகள் இலங்கை – இந்தியக் கூட்டறிக்கையிலும், 13ஐக் கட்டி எழுப்பி அதன் மேல் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்தை உருவாக்கு வோம் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அது இன்னமும் செய்யப்படவில்லை.

இவற்றை ஓர் புதிய அரசியல் யாப்பின் மூலமோ அல்லது என்ன விதத்திலும் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்படுத் தப்பட வேண்டும். எமது கட்சியைப் பொறுத்த மட்டில் நாம் ஓர் சமஷ்டிக் கட்சி. அதுவே எமது கட்சியின் பெயரும் கூட. ஒரு சமஸ்டி முறையில்தான் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இருக்கும் என நம்புகின்றோம். அந்த இலக்கை அடையும் வரையில் தற்போதுள்ள மாகாண சபை முறைமை நடை முறைப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபைகளிற்கான தேர்தல் நடாத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது. அது உடனடியாக நடத்தப்பட வேண்டும். இதனைப் பாரதப் பிரத மர் மோடியும் இன்றும் கூறியுள்ளார். அதற்கும் நன்றி தெரிவித்தோம்.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட அரசு எத்தனிப்ப தாக நாம் சந்தேகின்றோம். அது உடனடியாக நடாத்தப்பட வேண்டும். இந்தியா மட்டும்தான் இலங்கைத் தமிழர் விட யத்தில் எப்படியான தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதை இலங்கை அரசோடு இணங்கி ஓர் சர்வதேச ஒப்பந்தம் செய்தது. அது இன்று வரை அமுலில் உள்ளது. அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவின் இடத்திலே இருக்கின்றது. நாம் இந்தியாவிடம் அதனை எதிர்பார்க்கின்றோம் எனச் சொன்னோம்.

இதேபோன்று எங்களது மக்களின் நிலங்கள் அபகரிக் கும் விடயங்கள், இந்துக் கோயில்கள் இருந்த இடங்க ளில், பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. அதற்கான உதாரணங்களையும் கூறினோம். அப்படியான நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு இலங்கைக்கும் இந்தியாவிற் குமான தொடர்பாடல், அதற்காக இராமேஸ்வரம் ஊடான படகுச் சேவை, காங்கேசன் ஊடான கப்பல் சேவை, பலாலி விமான சேவை போன்று வலுப்பெற வேண்டும். இந்திய மூலதனங்கள் இலங்கைக்கு வர வேண்டும். இந்தியாவிலே தற்போது அகதிகளாக வாழும் ஈழத் தமிழ் மக்கள் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும்.

இதேபோன்று இலங்கை – இந்திய மீனவர்கள் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. இந்தியப் பிரதமரிடம் கூறியுள் ளோம். இழுவைப் படகு முறைமை சுற்றுச் சூழலிற்குப் பாத கமானது. அது தடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் டில்லியில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது 2016இல் இணக்கம் எட்டப்பட்டு கூட்டறிக்கையும் உண்டு. இணங்கிய விதமாக இந்த இழுவைப் படகு முறை முற்று முழுதாக தடுக்கப்பட வேண்டும். இலங்கையிலே சட்டத்தை இயற்றியுள்ளோம் இந்தியாவிலும் சட்டமாக்கப் பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தோம். மீனவர்க ளின் பாதிப்புத் தொடர்பில் சித்தார்த்தன், கஜேந்திரகுமார் ஆகியோரும் எடுத்துரைத்தனர். அவர்களும் அரசியல் தீர்வு தொடர்பிலும் வலியுறுத்தினர். – என்றார்.

# சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்ட 12 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன

சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்படாத நிலையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மேலும் 12 வாகனங்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைப்பற்றப்பட்டன.

ஜீப், Mitsubishi Montero ரக வாகனங்கள், Toyota ரக வாகனங்கள், Land Cruiser Prado ரக வாகனம், Nissan Double Cab உள்ளிட்ட வாகனங்கள் இதில் உள்ளடங்குகின் றன என ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த முறைகேடுகள் இடம்பெற்ற விதம் மற்றும் இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முறைகளின் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக்குழு குறிப்பிட்டது.

அரசாங்கத்திற்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தி சட்டவிரோ தமாக பதிவு செய்யப்பட்ட 15 வாகனங்களை ஏற்கனவே ஆணைக்குழு கைப்பற்றப்பட்டன. அவை மேலதிக பரிசோத னைகளுக்காக சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

# இரு இலங்கை மீனவர்களை இந்தியா விடுதலை செய்தது

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களை இலங்கை அரசு விடுவித்தமையை அடுத்து பதில் நல்லிணக்க நடவடிக்கையாக இந்திய அரசும் தனது காவலில் இருந்த இரு இலங்கை மீனவர்களை விடுவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி தமிழ்நாடு பாசிப்பட்டணம் கடற்கரையில் இருந்து நான்கு கடல் மைல் தூரத்தில் கடலில் பிடிக்கப்பட்ட இரு யாழ்ப்பாணம் மீனவர்களே நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பூலோகதாசன் – ராஜா நவம், (19, முதலாம் குறுக்கு தெரு, குருநகர், யாழ்ப்பாணம்) மற்றும் விமலேந்திரன் ஞானராஜ் ஜெகாஸ் (ஜென்ஜேம்ஸ் வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்) ஆகிய இரு மீனவர்களே இந்தியாவில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சந்திப்பின் பிரதிபலிப்பு

மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இன்று தாயகம் திரும்புகிறார். அவருக்கு கொழும்பிலும், இன்று அனுராதபுரத்திலும் பெரு வரவேற்பு அளிக்கப்படுகின்றது.

2019 இல் அவர் கொழும்பு வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தலைவர்களை சொற்ப நேரம் சந்தித்துப் பேசியிருந்தார். மீண்டும் புதுடில்லியில் தமிழ் தலைவர்களைத் தாம் சந்திப்பார் என அவர் கூறிச் சென்ற போதிலும், இப்போதுதான் - சுமார் ஆறு ஆண்டுகள் கழித்துத் தான்-அந்தச்சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றிருக்கின்றது. சந்திப்புக் குறித்து அதில் பங்கு பற்றிய தமிழ் தலைவர்கள் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். சந்திப்பின் பெறுபேறுகள் இனிமேல்தான் களத்தில் தெரியவர வேண்டும்.

ஆயினும் இந்தத் தடவை இந்திய பிரதமரின் இலங்கை விஜயம் சற்று வித்தியாசமானதாக இருந்தமை அவதானிக்கத்தக்கது.

எண்பதுகளின் பிற்பகுதிகளில் இருந்து இலங்கைத் தமிழர் விவகாரத்தை இலங்கையுடனான இத்தகைய உயர் மட்ட சந்திப்புகளில் முக்கியத்துவம் கொடுத்து பிரதிபலித்து வந்த இந்தியா, கடந்த வருட இறுதியில் புதிய இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க புதுடில்லி சென்றபோது இடம்பெற்ற சந்திப்பில் மாகாண சபை, 13 ஆம் திருத்தம், அதிகார பகிர்வு போன்ற யாவற்றையும் மறந்து, அவை பற்றி பேசாமல், அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அமைதிப்பேணியமை தமிழர் தரப்புக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது.

ஆனால் இம்முறை இந்தியப் பிரதமரின் கொழும்பு வருகையின் போது, இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பு தொடர்பான இந்திய பிரதமரின் அறிக்கையில் இந்த விடயங்கள் மீண்டும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

“அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அவர்கள் எனக்கு தெரிவித்திருந்தார். அத்துடன் இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும், இலங்கை அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான வாக்குறுதியை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.” - என்றும் பேச்சுகளின் முடிவில் இந்தியப் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

‘அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை’ என்பது இந்த நாட்டின் சிறுபான்மையினருக்கும் உரிய பங்களிப்பை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றமையைக் குறிக்கும் குறியீடாகக் கொள்ளலாம்.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்குத் தனியான அபிலாஷைகள் இருக்கின்றமையையும், அவற்றை இலங்கை அரசு நிறைவேற்றும் எனத் தாம் எதிர்பார்க்கின்றார் என்பதையும் இந்திய பிரதமர் சுட்டியிருக்கின்றார்.

‘இலங்கை அரசமைப்பை முழுமையாக அமல்படுத்துவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதி’ என்று இந்தியப் பிரதமர் குறிப்பிடுவது 13ஆம் திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம்தான் என்பது திட்டவட்டமானது.

மாகாண சபை தேர்தல்களை இனியும் இழுத்தடிக்காமல் நடத்தி முடிக்க வேண்டும், மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை மாகாண சபைகள் ஊடாக பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளையும் இந்திய பிரதமர் கோடி காட்டி இருக்கிறார்.

இவையெல்லாம் நடைமுறைக்கு வருமோ, வராதோ தெரியவில்லை. ஆயினும் இவை குறித்து இன்னும் இந்தியா கரிசனையாக இருப்பதாக வெளிப்படுத்தப்பட்டிருப்பது தமிழர்களைப் பொறுத்தவரை திருப்தி தரக்கூடிய விடயம்தான்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

மிகவும் வயதில் குறைந்த இளைஞர்' என்று அவரைப் பார்த்து குறிப்பிட்டார். அதே சமயம் பின்னர் தமிழரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை பார்த்து பெயர் குறிப்பிட்டு அவரை விளித்து “சிவஞானம் உங்களுக்கு 90 வயதை எட்டி விட்டதா?” - என்று கேட்டார் பிரதமர் மோடி. “இல்லை... அவருக்கு வயது 85” - என்று சொன்னார் சுமந்திரன்.

“தமிழர் தரப்பில் மூத்த - சிரேஷ்ட தலைவர்” என்று சிவஞானத்தைப் பார்த்துக் குறிப்பிட்டு மெச்சினார் இந்திய பிரதமர்.

* * *

தமிழரசுக் கட்சிக்குள் தனியரசு நடத்த அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் எம்.பி. முயல்கின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கட்சியின் யாழ். மாவட்டத்துக்கான ஒரே எம்.பியான அவர் கட்சியின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டத்தில் மிஸ்ஸிங் என்று குறிப்பிட்டு இருந்தேன்.

நேற்று இந்தியப் பிரதமருடனான சந்திப்பிலும் அவர் தமிழரசாய் இணைந்து நின்றார் எனத் தெரியவில்லை.

இந்தியப் பிரதமருடனான இந்தச் சந்திப்பின்போது தமிழரசுக் கட்சி சார்பில் சுமந்திரனே பேசுவார் என்று தீர்மானிக்கப்பட்டமையை அடுத்து, கட்சி சார்பாக என்ன விடயங்களை இந்திய பிரதமரிடம் முன்வைப்பது என்பது குறித்து அச்சந்திப்பில் பங்கு பற்றும் கட்சியின் நான்கு பிரதிநிதிகளும் ஒன்று கூடி ஆராய நேற்றுக் காலை கொழும்பில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டத்துக்கும் சிறிதரன் மட்டும் வரவில்லை. சந்திப்பின் பின்னர் கொழும்பில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். அதற்கும் அழைப்பு அனுப்பப்பட்டும் சிறிதரன் அதில் பங்குபற்றவில்லை என்று அறிய வந்தது. மற்றைய மூவரும் சந்திப்புக்கு முன்னரும் ஒன்றுகூடி பேசி தீர்மானங்களை எடுத்துக் கொண்டு, சந்திப்பின் பின்னரும் பத்திரிகையாளர்களை ஒன்றாகச் சந்தித்துக் கருத்துக்களை வெளியிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறிதரனின் இந்தத் தனி ஆவர்த்தனம் கட்சியின் செல்நெறியைப் பெரிதும் பாதிக்கும் என்று நினைக்கிறேன்.

* * *

பருத்தித்துறை பிரதேச சபைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளால் கை வாங்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்ட பின்புலத்தை நேற்றும் நேற்று முன் தினமும் என் பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டு இருந்தேன்.

இந்த விடயத்தை ஒட்டி சம்பந்தப்பட்ட சட்டத்தரணி எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றிய தயார்படுத்தல் குறித்துக் கோடிகாட்டி இருக்கின்றார் என்றும் நேற்று குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது எனக்கு சட்டத்தரணி நோட்டீஸ் அனுப்பும் கடிதம் ஒன்றை அவரின் சட்டத்தரணியான தவேந்திரராஜா டினேஷ் என்பவர் மூலம் எனக்கு அனுப்புவதற்கு தயாரித்திருக்கிறார் என்று அறிய வந்தது.

வக்கீல் நோட்டீஸில் பத்துக் கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்க விழைகின்றார்களாம்.

நல்லது. இந்த விவகாரம் கையாளப்பட்ட உயர்நீதி மன்றத்தில் விடயம் முழுமையாக பதிவில் இல்லாவிட்டாலும், அந்த அடிப்படை உரிமை மீறல் மனு கை வாங்க வேண்டிய வந்த நிலைமை வரை சம்பந்தப்பட்ட நீதியரசர்கள் வரை யாவருக்கும் தெரியும் என்பதால் அங்கு அதுபற்றி நேரடியாக ஆராய அவரது அழைப்புக்குக் காத்திருக்கிறேன்.

---

## “பாதுகாப்பு...

இரண்டு நாடுகளின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புதிய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை - இந்திய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு உறவுகள் வலுப்பெறும் என்பதுடன், பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்புகள், அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்றம் மேலும் விஸ்தரிக்கப்படும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு துறைசார்ந்த ஒத்துழைப்புகள் இராணுவ மற்றும் கடற்படை கூட்டுப்பயிற்சிகள், செயலமர்வுகள் போன்ற திட்டங்கள் ஊடாக வலுப்பெற்றுள்ளன.

இதனைத் தவிர வருடத்துக்கு இலங்கைப் பாதுகாப்பு படைகளின் 750 பேருக்கு சிறப்பு பயிற்சிகளை இந்தியா வழங்குகின்றது. இரண்டு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகள் ஊடாக பல்வேறு நன்மைகள் இலங்கைக்குக் கிடைக்கின்றன.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் 2023ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாதுகாப்பு கலந்துரையாடலில், இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் விரிவுப்படுத்தல் மற்றும் செயற்திறன் மிக்கதாக்குவது போன்ற விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போதே புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. இதன்பிரகாரம் ஏனைய நாடுகளுடன் இலங்கையின் இராஜதந்திர உறவுகள் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் கடந்த ஜனவரி மாதத்தில் சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆழமாக மீளாய்வு செய்து கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதியும் எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்தியாவுடன் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தால் இரண்டு நாடுகளின் தேசிய கொள்கைகளுக்கோ அல்லது சட்ட கட்டமைப்புக்கோ எவ்விதமான அழுத்தங்களும் ஏற்படாது.

இலங்கை - இந்திய புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின்போது, இரண்டு தரப்பு தேசிய மற்றும் இராணுவ சட்டங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் என்பவற்றைப் பாதுகாப்பதில் இரண்டு நாடுகளும் உறுதியுடன் உள்ளன.

எனவே, இரண்டு நாடுகளின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது, உள்ளக விடயங்களில் தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் ஏற்படுத்தப்படாதவாறு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களைப் பாதுகாப்பதற்கு இரண்டு நாடுகளும் ஒப்பந்தத்தின் ஊடாக ஒப்புதல் அளித்துள்ளன.

இலங்கை - இந்திய பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு உறவுகள் வலுப்பெறும் என்பதுடன், பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்புகள், அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்றம் மேலும் விஸ்தரிக்கப்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், 5 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் மூன்று மாத முன்னறிவிப்பு மூலம் ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளும் உரிமையும் உள்ளது.”

- என்றார்.

# அமெரிக்க தீர்வைவரி தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவை சந்தித்தார் ஜனாதிபதி





அமெரிக்க தீர்வைவரி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்தார்.

புதிய தீர்வை வரிகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் நாடு என்ற ரீதியில் முன்னெடுக்கபடவேண்டிய விடயங்கள் தொடர்பாக குறித்த குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் இதன் போது ஆராயப்பட்டன.

வரிச்சலுகையை பெற்றுக்கொள்வது தொடர்பில் அரசாங்கம் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை விரைவாக முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இலங்கை பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் 44 வீத தீர்வை வரியை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**3 அபிவிருத்தி...**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்துடன் இணைந்து, இந்திய அரசின் ஆதரவுடன் நாட்டில் செயற்படுத்தப்படும் மூன்று அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு மற்றும் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

தேசிய மின் கட்டமைப்பில் 50 மெகாவாட் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய மின்நிலையத்தின் பணிகள் ஆரம்பித்தல், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தம்புள்ளை விவசாய களஞ்சி கட்டடத் தொகுதி மற்றும் இந்திய அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம் ஆகியவை இணைய வழி தொழில்நுட்பம் மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்புக்குப் பிறகு இரு தலைவர்களும் இதில் இணைந்துகொண்டனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" என்ற கருத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இந்தியாவின் என்.ரி.பி.சி. லிமிடெட் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியான திருகோணமலை மின்சார நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள சம்பூர் சூரிய மின் நிலையம், நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள வடக்கு, கிழக்கு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வலயத்தின் ஒரு பகுதியாகும்.

சம்பூர் சூரிய மின் நிலையத் திட்டம் இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டம் 2027 இல் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 500 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் 50 மெகாவாட் மின்சாரம் நாட்டின் தேசிய மின்சார விநியோகத்தில் இணைக்கப்படும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவப்படும் இந்தத் திட்டம், வலுசக்தி பாதுகாப்பை அதிகரிக்கும் என்றும், நாட்டின் வலுசக்தி அமைப்பைப் புதைபடிவ எரிபொருட்களை நம்புவதற்குப் பதிலாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நோக்கி மாற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, சம்பூர் சூரிய மின்நிலையத் திட்டம் ஆண்டுதோறும் வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படும் காபனீரொக்சைட் அளவை சுமார் 2 மில்லியன் டொன்கள் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் திட்டம், பசுமையான எதிர்காலத்தை நோக்கிய அரசின் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கின்றது.

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை சுமார் 40 வீத குறைத்தல், விவசாயப் பொருட்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துதல், நுகர்வோருக்கு தரமான உணவை வழங்குதல் மற்றும் விவசாய நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், 5,000 மெட்ரிக் டொன் கொள்ளளவும், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ள தம்புள்ளை விவசாய களஞ்சிய கட்டடத் தொகுதி நேற்று இணையவழியில் திறந்து வைக்கப்பட்டது.

பல்வேறு பயிர்களுக்கான உகந்த சேமிப்பு முறைகள் குறித்த ஆராய்ச்சியை எளிதாக்குவதற்காக இந்தக் களஞ்சியத் தொகுதியில் ஆறு அறைகள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு அறையும் வெவ்வேறு காலநிலை நிலைமைகளை உருவகப்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதன்முதலில் நிறுவப்படும் இந்தக் களஞ்சிய கட்டடத் தொகுதியின் மொத்தச் செலவு 524 மில்லியன் ரூபாவாகும். இதில், 300 மில்லியன் ரூபா இந்திய அரசின் நன்கொடையாவதோடு, இதற்காக இலங்கை அரசு 224 மில்லியன் ரூபாக்களைச் செலவிடுகின்றது.

5,000 மதஸ்த் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம், நாடு முழுவதும் உள்ள 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகவும், அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட 5,000 மதஸ்த் தலங்களில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தில் இந்திய அரசு 17 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. மேலும் இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றன.

அதன்படி, பௌத்த, இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களின் கூரைகளில் 5 கிலோவாட் கொள்ளளவைக் கொண்ட 5,000 சூரிய மின் கலங்கள் நிறுவப்படும். இது நாட்டின் வலுசக்திக் கட்டமைப்பில் 25 மெகாவாட் சூரிய மின்சக்தி திறனை இணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் செலவு குறைந்த, நிலைபேறான மற்றும் நம்பகமான வலுசக்தி அமைப்பை நோக்கிய அரசின் நோக்கத்தை வலியுறுத்துகின்றது.

# தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கை இன்றுடன் நிறைவடையும்




250 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகர் ப்ரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதனிடையே இன்று தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை தபால்மூல வாக்களிப்பிற்காக 7 லட்சம் தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன.

தபால்மூல வாக்குச்சீட்டுகளை எதிர்வரும் 7ஆம் திகதி விநியோகிக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்த நாள்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28, 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஒற்றையாட்சிக்குள்...**

வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ, அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்.

விசேடமாக வடக்கு, கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்.

இரண்டாவது விடயம் – தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓரளவு நெருக்கமாக வந்த சர்வதேச ஆவணம் இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்.

ஆனால், இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சியை ஒற்றையாட்சி என்ற நெருக்கடிக்குள் முடக்கியமையால் அது பலன் தரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

1987 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, இவ்வளவு காலத்தின் பின்னரும் இன்னமும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள், நடைமுறைப்படுத்துங்கள் என்று இந்தியா கோர வேண்டிய – வலியுறுத்த வேண்டிய – அவல நிலை நீடிப்பதற்கு இது ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டமையே காரணம் என்பதை விளக்கினோம்.

இந்த 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் மத்திய அரசே மேலானது, 13ஆம் திருத்தத்தினால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் மோதல் வருவதற்கு இடமில்லை என்று அப்போதே அதை ஒட்டிய ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது. ஒற்றையாட்சி முறைமைக்குள் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்குத்தான் இருப்பதை அது உறுதிப்படுத்தியதை நாங்கள் தெளிவுபடுத்திச் சுட்டிக்காட்டினோம்.

ஆக, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருப்பதால், அந்த ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பகிரவே இடமில்லை என்பதை இந்தியப் பிரதமருக்குச் சொன்னோம்.

இதுவே 38 வருடங்களாக நாங்கள் கண்ட அனுபவம் என்பதையும் தெரிவித்தோம்.

13ஆம் திருத்தத்தை ஒற்றை ஆட்சிக்குள் முடக்கியமையால்தான் இன்றும் கூட தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்பதை நாங்கள் விளங்கப்படுத்தினோம்.

இதனையே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு முதல் தடவையாக வந்து இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, கூட்டுறவு சமஷ்டியே தீர்வுக்கு வழி என்று குறிப்பிட்டமையை நாங்கள் நினைவுபடுத்தினோம்.

ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி முறைமைக்குக் கீழ் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு தீர்வைக் காண எத்தனித்தால் வழி பிறக்கும் என்பதை நாம் விளக்கினோம்.

இந்த விடயங்களை அடைவதற்காகத் தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்துப் பேசுங்கள் என்று நாங்கள் இந்தியப் பிரதமரைக் கோரினோம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை மீறாமல், ஆனால் அதே நேரம் ஒற்றையாட்சி முறைமையைத் தாண்டி, ஒரு சமஷ்டி ஏற்பாட்டை முழுமையாக அடையக்கூடிய – இந்தியாவும் ஏற்றுக்கொள்ளத்தக்க – பொது நிலைப்பாடு ஒன்றை எட்டுவதற்கு உதவுமாறு நாங்கள் இந்தியப் பிரதமரை வேண்டினோம்.

மூன்றாவதாக – இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்தியா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்தோம்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வெளித் தரப்புகளுக்கு இப்பிராந்தியத்தில் காலூன்ற இடம் அளிக்கக்கூடாது என்ற எங்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினோம்.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் இந்தியாவின் பாதுகாப்பு நோக்கோடு நோக்கப்படுகின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளையில் இந்தப் பிராந்தியத்தின் குடிசனப் பரம்பல் விகிதாசாரத்தை மாற்றி அமைக்காத விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முழு அளவில் ஈடுபட்டுப் பங்களிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்.

மீனவர் பிரச்சினை பற்றி நான்காவதாகப் பேசினோம். இலங்கையின் வடக்கு – கிழக்கு மீனவர்கள் இன்று வாழ்வா, சாவா நிலைமையில் அவலப்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினோம். இந்தப் பிரச்சினை எந்த வழியிலாவது தீர்க்கப்பட்ட வேண்டும். அது தொடர இடமளிக்கக்கூடாது. இந்த விடயத்தில் வடக்கு – கிழக்கு மீனவ பிரதிநிதிகளும், அரசியல் பிரதிநிதிகளும், இந்தியாவுக்குச் சென்று, எங்கள் உறவுகளோடும் மீனவப் பிரதிநிதிகளோடும் பேசித் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம்.

எங்கள் மீனவர்களின் இழப்புக்கு உரிய நட்டஈடுகள் கூட இன்னும் வழங்கப்படவில்லை. அவை பற்றியும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்தினோம்." – என்றார் அவர்.



# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்; மியன்மார் சென்றது முப்படை குழு

நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக முப்படையினர் அடங்கிய குழுவினரை ஏற்றிய முதலாவது விசேட விமானம் மியான்மருக்கு நேற்று பயணத்தை மேற்கொண்டது.

இதில் வைத்தியர்கள் குழு, மீட்புக் குழு, நிவாரணக் குழு ஆகியன அடங்குகின்றன என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் தொகையும் மேற்படி விமானத்தில் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

மேற்படி விமானம் நேற்று காலை 08 மணிக்கு மியன்மார் நோக்கி புறப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



# ரொஷான் ரணசிங்கவின் மனைவி வாக்குமூலம்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் மனைவி தினுஷா ரணசிங்கவிடம் வலான ஊழல் ஒழிப்பு பிரிவு நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

போலியாகப் பதிவு செய்யப்பட்ட பாரவூர்தி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா அளித்த வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இதற்கமைய, தினுஷா ரணசிங்கவிடம் நேற்று சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாக வலான ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே போலியாக பதிவு செய்யப்பட்ட பாரவூர்தியை வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வலான ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜெனீவாத் தீர்மானத்திற்கு எதிராகவே இந்த அரசாங்கம் கருத்துரைக்கிறது

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிராகவே அரசாங்கம் கருத்துரைப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையிலும் ஒருவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இல்லாமல் போகும் நிலை காணப்படுகிறது.

இந்தநிலையில் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்காக புதிய விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பெறுவதாயின் அதற்காக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிதாக விண்ணப்பங்களை முன்வைத்து அதனைப் பெற்றுக் கொள்வது இலகுவான விடயமல்ல. அதேநேரம், அமெரிக்காவினை புறக்கணித்து ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை மாத்திரம் நோக்கிச் செல்ல முடியாது.

இலங்கையின் ஏற்றுமதி சந்தையில் அமெரிக்கா முக்கிய பங்காற்றுகிறது.” என்றார்.



# அமெரிக்காவின் வரி விதிப்பால் இறப்பர் தொழிலாளர்கள் பாதிப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரியின் காரணமாக பல்வேறு வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பினரும் பாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறப்பர் தொழிலாளர்கள் பாரியளவு பாதிப்பை எதிர்நோக்கக் கூடும் என அந்த தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில், சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் இறப்பரை அடிப்படையாகக் கொண்டு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் ஆடைத் தொழில்துறை கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும் எனச் சுதந்திர வர்த்தக வலய பொதுச் சேவையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் என்டன் மாகஸ் குறிப்பிட்டுள்ளார்.






# வடக்கின் 3 முதலீட்டு வலயங்களையும் இந்த ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பு

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் முதலீட்டுச் சபையின் தலைவர் தெரிவிப்பு






அரசு வடக்கில் முன்மொழிந்துள்ள 3 முதலீட்டு வலயங்களும் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும், இதன் ஊடாக 16,000 பேருக்கு தொழில்வாய்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் எனவும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், இலங்கை முதலீட்டுச் சபையினருக்கும் வடக்கின் அரச அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

"மூன்று தசாப்தகால போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு தற்போது அதிகளவு முதலீட்டாளர்கள் வருகை தருகின்றனர். அவர்களுக்கான ஒழுங்குகளைச் செய்துகொடுக்கின்றோம். அரசும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இந்தக் காலத்திலேயே முதலீடுகளுக்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. எமது இளையோருக்கு வேலை வாய்ப்பு பிரச்சினையாகவுள்ளது. தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் என்பன எமது அபிவிருத்திக்கு தடையாக வுள்ளன." – என்று இதன்போது ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் முதலீட்டுச் சபையின் தலைவர் தனது உரையில்,

"இவ்வாறான கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியமைக்காக ஆளுநருக்கு நன்றிகளைக் கூறுகின்றோம். முதலீடுகளை ஊக்குவிக்கும் அவரது முயற்சியை வரவேற்கின்றோம். எவ்வளவு விரைவாக வடக்கின் மூன்று முதலீட்டு வலயங்களுக்குமான பணிகளை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செய்வதற்கே விரும்புகின்றோம். அடையாளப்படுத்தப்பட்ட மூன்று முதலீட்டு வலயங்களையும் நாங்கள் பார்வையிட்டுள்ளோம்." – என்றார்.

காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய முதலீட்டு வலயத்துக்கான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாக தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன. இதனை முன்னெடுப்பதிலுள்ள உடனடிச் சவால்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு தீர்வுகளும் கண்டறியப்பட்டன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அதற்கான புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் புனரமைத்து மீளமைப்பதுடன் அதனை காங்கேசன்துறை துறைமுகம் வரையில் விரிவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பரந்தனுக்கு அண்மையாக ரயில் நிலையம், ஏ-9 பிரதான வீதி உள்ளமை சாதகமாக அம்சம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் சில இடங்களில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

மாங்குளத்தில் அடையாளப் படுத்தப்பட்டுள்ள காணி வனவளத் திணைக்களத்துக்குரியது என்பதால் அதனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மூன்று முதலீட்டு வலயங்களைச் சுற்றியும் வேலிகளை அமைத்து அதனை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் அமைக்கப்படவுள்ள முதலீட்டு வலயங்கள் சுற்றுச்சூழல் நேயமிக்கதாக அமையும் என முதலீட்டுச் சபையினர் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற முதலீட்டாளர்கள், கடந்த காலங்களிலும் பல சந்திப்புக்கள் நடைபெற்றாலும் அடுத்த கட்டத்துக்கு அவை நகர்ந்திருக்கவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். அத்துடன் உள்ளூர் அதிகாரிகள் தமது முதலீட்டு முயற்சிக்கான போதிய ஒத்துழைப்புக்களை வழங்கமறுக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினர்.

தற்போது ஆரம்பித்துள்ள தமது முயற்சியில் இவ்வாறான கசப்பான சம்பவங்கள் நடைபெறாது என்றும், இந்த மூன்று முதலீட்டு வலயங்களும் நிச்சயம் இயங்கும் எனவும் முதலீட்டுச் சபையின் தலைவர் உறுதியளித்தார்.



# வள்ளிபுனத்தில் போதையில் பெண்களைத் தாக்கிய இளைஞர் குழுவினரை உடனடியாகக் கைது செய்க!

## பொலிஸாரிடம் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் கடந்த 02.04.2025 அன்று அப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர் குழுவினர் மதுபோதையில், அப்பகுதிப் பெண்கள் சிலரைத் தாக்கியுள்ளனர்.

இந் நிலையில் நேற்றைய தினம் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாதிக்கப்பட்ட பெண்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தமையுடன், உடனடியாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலயம் சென்று அந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய – சட்டவிரோதச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட – அந்த இளைஞர் குழுவை உடனடியாக கைது செய்யுமாறும் புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வலியுறுத்தியிருந்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு,

வள்ளிபுனம் பகுதியில், சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர் குழுவால் தொடர்ந்தும் அப்பகுதிமக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

கடந்த 2 ஆம் திகதி மாலைவேளை வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் அப்பகுதியைச்சேர்ந்த மகளிர் சுயசேமிப்பு கொத்தணி குழு ஒன்றினுடைய கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவ்வீட்டின் அருகே செல்லும் வீதியால் வந்த, அப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் குறித்த இளைஞர்குழு, கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பெண்களை தகாத வார்த்தையால் திட்டியமையுடன், கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பெண்கள் சிலரைக் கடுமையாகத் தாக்கியுமுள்ளது.

குறிப்பாக தலைக்கவசத்தினால் ஒரு பெண்ணின தலைப் பகுதி மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. தாக்குதலுக்குப் பயன்படுத்திய தலைக்கவசமும் இதன்போது காண்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைய, தாக்குதலுடன் தொடர்புடைய நால்வரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய மூவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினரின் நிலமைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உடனடியாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம்சென்று தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய மூவரையும் கைது செய்யுமாறு புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வலியுறுத்தினார். அப்பகுதியில் சட்டவிரோத செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான அச்சுறுத்தல் நிலைமையைக் கட்டுப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

இந் நிலையில் இத்தாக்குதல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏனைய மூவரையும் கைதுசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பார் எனப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினருடன் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முப்புரம் வட்டார வேட்பாளர் சிவபாதம் குகநேசன் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# வரிகளைக் குறைப்பதற்கான சலுகைகளைப் பரிசீலிப்பேன்

## ட்ரம்ப் அறிவிப்பு

உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைப்பதற்கான சலுகைகளைப் பரிசீலிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய வரியை எதிர்நோக்கியுள்ள இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்குத் தயாராகி வரும் நிலையில், அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

10 சதவீதம் என்ற அடிப்படையில் புதிய வரி அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சில நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 40 சதவீதத்துக்கும் அதிக வரி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 44 சதவீத வரி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கம்போடியா 49 சதவீத வரியையும், வியட்நாம் 46 சதவீத வரியையும், சீனா 34 சதவீத வரியையும் எதிர்கொள்கின்றன.

ஏனைய நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், அது உலக வர்த்தக போருக்கு வழிவகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# தாயகம் திரும்புகின்றனர் ரோஹிங்கியா அகதிகள்



மியன்மாரை விட்டு வெளியேறி பங்களாதேஷில் தஞ்சமடைந்த 180,000 ரோஹிங்கியா அகதிகள் தாயகம் திரும்ப தகுதியுடையவர்கள் என மியன்மார் அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

பேங்கொக்கில் நடைபெற்ற தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் தாய்லாந்து, நேபாளம், பூட்டான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், இந்தியா ஆகிய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொண்டனர்.

2017 ஆம் ஆண்டு மியன்மாரில் ஏற்பட்ட இராணுவ ஒடுக்கு முறையிலிருந்து தப்பிச் சென்ற சுமார் 70,000 ரோஹிங்கியா அகதிகள் பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கைத் தமிழர்களுக்கு 10,000 வீடுகள்: பிரதமரின் அறிவிப்புக்கு திருமாவளவன் வரவேற்பு



"இலங்கை வாழ் தமிழர்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற பிரதமரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இலங்கை வாழ் தமிழர்கள் சுதந்திரமாக அவர்களது மண்ணில் வாழ இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு சிதம்பரம் எம்.பியும், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவருமான திருமாவளவன் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம் காட்டத்தூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைய நாளில் பிரதமர் இலங்கையில் இருக்கிற சூழலில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து காலம் காலமாக விடுத்து வருகிற கோரிக்கையை நிறைவேற்றக் கூடிய வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்கள் சுதந்திரமாக கச்சதீவு வரையில் சென்று மீன்பிடிப்பதற்குரிய உரிமைகளை வலியுறுத்த வேண்டும். இலங்கை வாழ் தமிழர்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டி தரப்படும் என பிரதமர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. மத்திய அரசு ஏற்கெனவே வீடுகள் கட்டும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் கூட இன்னும் லட்சக்கணக்கான மக்கள் அவர்களின் சொந்த கிராமத்துக்கு செல்ல முடியவில்லை. காணிகளை மீட்க முடியவில்லை. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்மணிகள் கணவரை இழந்து பரிதவிக்கும் அவலம் நீடிக்கிறது.

எனவே, அந்த மண்ணின் மைந்தர்கள் சுதந்திரமாக அங்கு வாழ வேண்டுமானால் காணிகளை ஆக்கிரமித்து இருக்கிற சிங்கள இராணுவத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும். சிங்களர்களின் குடிப்பெயர்வை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை பிரதமர் மேற்கொள்வது தான் ஈழத் தமிழர்களுக்கு செய்கிற மிக முக்கியமான ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக அமையும். இலங்கை அரசு பிரதமர் நரேந்திர மோடிக்கு விருது கொடுத்திருப்பது மகிழ்ச்சி. இந்தியா, இலங்கை இரு நாடுகளின் உறவை நல்லிணக்கமாக பேணுவதற்கு அவர்கள் இந்த விருது கொடுத்திருக்கலாம்.

வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா அடாவடித்தனமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நள்ளிரவுக்கு மேல் விவாதத்தை நடத்தி இந்திய அரசியல் வரலாற்றில் இல்லாத அளவுக்கான ஒரு கலங்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த அநீதியை மோடி அரசு அரங்கேற்றிருக்கிறது. அவர்களுக்கு போதிய பெரும்பான்மை இல்லை. ஆனாலும் கூட்டணி கட்சிகளை தம் கட்டுக்குள்ளே வைத்து இந்த சட்டத்தை நிறைவேற்றி இருப்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு பெரும் தீங்கை விளைவிக்கும். தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து 232 பேர் எதிர்த்து வாக்களித்திருக்கிறோம்.

மக்களவையில் 95 பேர் எதிர்த்து வாக்களித்து இருக்கிறோம். மாநிலங்களவையில் இவ்வளவு கடுமையான எதிர்ப்புக் கிடையே இந்த சட்டத்தை அவர்கள் நிறைவேற்றி இருப்பது சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய நாள் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு கருப்பு நாள் என்று வரலாறில் பதிவாகி இருக்கிறது." – என்றார்.

# இன்று இராமேஸ்வரம் செல்கிறார் பிரதமர் மோடி; பொலிஸ் கட்டுப்பாட்டில் ராமநாதசுவாமி கோயில்





பிரதமர் மோடி இன்று இராமேஸ்வரம் செல்லவுள்ளார். இதனை முன்னிட்டு இராமநாதசுவாமி கோயில் பொலிஸ் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை முன்னிட்டு இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பக்தர்களுக்கு அனுமதி இல்லை எனவும் இராமேஸ்வரம் – இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரையிலும் வாகனங்களுக்கு அனுமதி யில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாம்பன் புதிய ரயில் பாலத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி இன்று தமிழகம் செல்கிறார். முன்னதாக இலங்கை வந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி அங்கிருந்து மண்டபம் செல்கிறார்.

அங்கிருந்து கார் மூலம் பாம்பன் சாலை பாலத்தின் மத்திய பகுதிக்கு சென்று பகல் 12.00 மணியளவில் புதிய பாம்பன் ரயில் பாலத்தை கொடி அசைத்து திறந்து வைத்து பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி அர்ப்பணிக்கிறார். தொடர்ந்து பாம்பன் சாலை பாலத்திலிருந்து 12.30 மணியளவில் புறப்பட்டு நேராக இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் பிரதமர் நரேந்திர மோடி சுவாமி தரிசனம் செய்கிறார்.

பக்தர்களுக்கான தரிசன ஏற்பாடுகள் குறித்து ராமநாதசுவாமி கோயில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில் வழக்கம்போல இன்று அதிகாலை 4 மணியளவில் நடை திறக்கப்படும். காலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை ஸ்படிகலிங்க பூஜை நடைபெறும். அதன்பின் ஆறு கால பூஜைகள் நடைபெறும்.

பிரதமரின் வருகையால் பாதுகாப்பு மற்றும் நிர்வாக காரணங்களுக்காக காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை திருக்கோயிலுக்குள் தரிசனம் மற்றும் தீர்த்த நீராட பக்தர்களுக்கு அனுமதி இல்லை. பிற்பகல் 3.30 மணி முதல் வழக்கம்போல் பக்தர்கள் தரிசனம் மற்றும் தீர்த்த நீராட அனுமதிக்கப்படுவார்கள்"" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் வருகையை முன்னிட்டு இன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை, இராமேஸ்வரம் – இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் வாகனப் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்படும், அதுபோல இராமேஸ்வரம் நகரத்திற்குள் வாகனங்கள் கட்டுப்படுத்தப்படும் என இராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -06.04.2025




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகள் காணப்படும். பணிகள் மும்மரமாக இருக்கும். என்றாலும் உங்கள் திறமை மூலம் நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறை நேர்மையாக இருக்கும். இந்த நேர்மை உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். இன்று ஆக்க பூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் நம்பிக்கை தரும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய தினத்தை அமைதியான தினமாக ஆக்க நீங்கள் நம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் இருக்க வேண்டும். பதற்றத்தை விடுத்து மகிழ்ச்சியாக இருங்கள்.

பணிகள் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். எளிதாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசி உங்கள் நாளை மகிழ்ச்சியானதாக ஆக்குவீர்கள். இதனால் வேறுபாடுகள் நீங்கி திருப்தி நிலவும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தைக் கையாளும் போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

இன்று சளி மற்றும் இருமலால் பாதிக்கப்படுவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.




இன்று நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். உணரச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். சிறப்பான பலன்கள் பெற உங்கள் செயல்களை திட்டமிட வேண்டும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள்.திறமையுடன் பணியாற்ற திட்டமிடுதல் அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே விவாதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு இருவரும் பேசுவதை தவிர்க்கவும். இன்று உங்கள் காதால் மனதை வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள் அல்ல.

உங்களிடம் பணம் சிறிதளவு காணப்படும். ஆனால் செலவுகள் அதிகமாக இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆற்றல் குறைந்து காணப்படும். தோள் வலியால் பாதிக்கப்படலாம்




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இன்று சில சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று மனதுக்குத் திருப்தி கிடைப்பது கடினம்.

உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணியைக் குறித்து உங்கள் மேலதிகாரிகள் பெருமைப்படுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். சுமுகமான பேச்சுவார்த்தைகல் ஆறுதலை தரும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும்.

முறையான உணவுப் பழக்கத்தின் மூலம் ஆரோக்கியமாக இருக்க இயலும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்




இன்று வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்தாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கு கிடைத்த அங்கீகாரம் உங்களுக்கு திருப்தி அளிக்கும். புதிதாக கொடுக்கப்பட்ட வேலை உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

உங்கள் காதலை உங்கள் துனையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை திடமாக வைத்திருக்க உதவும். உங்களிடம் நம்பிக்கையான எண்ணங்கள் காணப்படும்.




இன்று உங்களுக்கென்று இலட்சியத்தை அமைத்துக் கொண்டு அதனை அடைய முயற்சி செய்வீர்கள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உயர்ந்த இலட்சியத்தை அடைவீர்கள்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி காணப்படாது. அதிகப் பணிகள் காணப்படும். அவை இயந்திரத்தனமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் தேவைகளுக்கு செலவு செய்ய போதிய அளவு பணம் காணப்படும். எதிர்கால முதலீடு திட்டங்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நீங்கள் தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். முறையாக உடற்பயிற்சி செய்வதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்படுத்த முயலுங்கள். அது உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரும்.

பணிகளை திறமையாக ஆற்றுவதில் ஸ்திரத்தன்மை இருக்காது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் பணத்தை முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தோல் எரிச்சல்கள் காணப்படலாம்.




இந்த நாளில் எழும் எந்தவிதமான சஞ்சலத்திற்கும் இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருப்பது நல்லது.

பணியிடச் சூழல் அனுகூலமாக இருக்கும். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் பிரியமானவரிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்த இயலாது. உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

நிதிநிலையில் பற்றாக்குறை காணப்படும். பணம் கரைவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திடமாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்

# இன்றைய ராசி பலன்கள் -06.04.2025




உங்கள் உறுதியின் மூலம் சிறந்த பலன்களைக் காண்பீர்கள். வெற்றியின் மீதான உங்கள் நம்பிக்கை காரணமாக வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

நீங்கள் பணிகளை எளிதாக ஆற்றி நற்பெயரைப் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள். அவர்கள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இன்று உங்கள் துணையிடம் நட்புறவு கொண்டிருப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கிய பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. இன்று அமைதியாக ஓய்வாக காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். நீங்கள் துடிப்புடன் இயங்க தேவையற்ற கவலைகளை விட்டொழிக்க வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தவறுகள் நேராமல் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள். இது உங்கள் நடத்தையில் வெளிப்படும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று சிறப்பான நாளாக இருக்காது. என்றாலும் இறைவழிபாட்டின் மூலம் இன்றைய நாளை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் குடும்பத்துடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் பணிகளில் தவறுகள் செய்வீர்கள். அதனை உங்கள் மேலதிகாரிகள் கவனிப்பார்கள். அந்த வேலையை திரும்ப செய்யக் கூறுவார்கள்.

உங்களின் மாறுபடும் மனநிலை உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். ஆரோக்கியமான உறவிற்கு நீங்கள் இன்று சகஜமாக இருக்க வேண்டியது அவசியம்.

கடன்கள் மூலம் பணம் பெறுவீர்கள். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வுகளை தவிர்க்க வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொண்டால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு சென்று வரலாம். உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படாமல் யதார்த்தமாக இருங்கள். அமைதியாக இருங்கள்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும்.

உங்களின் ஈகோ உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். இம்மாதிரி உணர்வுகளை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம். செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. உங்கள் நிதிநிலைமையை சிறப்பானதாக ஆக்க பயனுள்ள யுக்திகளைக் கையாள வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் மனக் கவலைகளை தவிர்த்தல் நல்லது. சிகிச்சை மேற்கொள்வது நல்லது. பிரார்த்தனை சிறந்த பலன்களைத் தரும்.

# தேங்காய் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தாததால்!

## அரசு அசமந்தம் என ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாக உள்ளது. ஆனால், வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாக உள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னை மரங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருவது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் தமிழ் – சிங்கள மக்களின் உணவிலும் பண்பாட்டிலும் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்ற தேங்காய்கள் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்குக் கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகின்றன. உற்பத்தியாகும் தேங்காய்கள் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்பட, மூன்றில் ஒருபாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும், தேங்காய் எண்ணையாகவும் மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாகத் தெங்கு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தென்னையுடன் தொடர்புபட்ட இன்னுமொரு அமைப்பான தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 2026ஆம் ஆண்டில் சுமார் நூறு மில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறைவு ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது. பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காகத் தேங்காய்ப்பால், உலர்ந்த தேங்காய்த் தூள், குளிர்ந்த தேங்காய்க்கூழ் ஆகியவனவற்றை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது. இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது பொருளாதாரரீதியாகப் பிந்தங்கியுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற ஏழை எளிய மக்கள்தாம்.

வீட்டு வளவுகளில் உள்ள தென்னைமரங்களை உணவாதாரமாகவும் வாழ்வாதாரமாகவும் பயன்படுத்திவந்த மக்கள் இன்று அம்மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காயைச் சொட்டாகப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். பெருமெடுப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் அத்திட்டத்தில் உள்வாங்கவேண்டும். விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையும். – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.